விச்வாவஸு ௵ புரட்டாசி ௴
செப்டம்பர் - அக்டோபர் 2025

மலர்: 8
இதழ்: 6

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





விச்வாவஸு ஞு புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2025

மலர்: 8
இதழ்: 6


ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது


**தர்மகர்த்தாக்கள்:**

ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி



**Photo Courtesy:** P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: yeSKay designs





**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com




ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

‘மணவாளப் புரட்டாசி’ என்று பெருமையுடன் போற்றப்படும் இந்த மாதத்தின் அதிஷ்டான தேவதை ஹ்ருஷீகேசன் என்ற திருநாமத்தையுடைய எம்பெருமான். ஹ்ருஷீகம் என்னும் நம்முடைய இந்திரியங்களை நியமிப்பவன் என்பதனால் ஹ்ருஷீகேசன் எனும் பெயர் பெற்றான்.

‘பொன்னையும் அகிற்கட்டையையும் கொண்டு, அலைமோதுகின்ற ஜலத்தையுடைய, வேகவதி நதியின் வடகரையில் பாண்டியராஜன் மகிழ்ந்து வணங்குகின்ற, தேனம்பாக்கத்திலுள்ள வைதிகப் பெரியோர்களின் ஒரே தெய்வமாகிய பேரருளாளன், ஹ்ருஷீகேசனென்னும் என் ஸ்வாமியாயிருந்து கீழ்ப்பாகம் கழுத்தின் இடப்புறம் ஆகிய இவற்றில் நன்கு நிலைபெற்ற மின்னைப்போன்ற நிறமுடையனாய் இருந்து நான்கு சம்மட்டிகளை ஆயுதமாகக்கொண்டு காப்பான்,’ என்று ஸ்வாமி தேசிகன் பன்னிரு நாமத்தில் ஸாதிக்கிறார்.

ஓணவிழவில் ஒலியதிர என்று திருமழிசைப்பிரனாலே மங்களாசாஸனம் செய்யப்பட்ட திருவேங்கட முடையானின் புரட்டாசி திருவோணத் தீர்த்தவாரி ப்ரஹ்மோத்ஸவம் மிகவும் ப்ரஸித்தம்.

அந்தத் திருவேங்கடவனின் திருமணியாய் உத்தமமான புரட்டாசித் திருவோணத் திருவிழவில் அவதாரம் செய்தருளிய சீரார் தூப்புல் வள்ளலின் அவதார மஹோத்ஸவமும் சேர்ந்திருப்பது இந்த மாதத்திற்கு மேலும் சீர்மையை நல்குகிறது.

‘அளவற்ற நற்குணங்கள் நிரம்பப்பெற்ற ஸ்ரீபாஷ்யகாரருடைய பெருமையையே பேசுமவரும் தூப்புலில் தோன்றிய பாகவத ச்ரேஷ்டருமான ஸ்ரீதேசிகனைச் சரணமடைந்த பாக்யசாலிகளிடம் பெரியோரிடத்தில் பணிவு, அடங்கியொழுகுந் தன்மை, நல்ல பழக்கம், சிறந்த அநுஷ்டாநம், பிராணிகளிடம் தயை ஆகிய நற்குணங்கள் தாமே வந்துசேரும்; துஷ்டஸஹவாஸம், அஜ்ஞாநம், பல்வகை தோஷங்கள், அசுத்தமான தன்மை ஆகிய தீயகுணங்கள் விலகிப்போம். ஆகவே ஸ்வாமி ஸ்ரீதேசிகனைச் சரணமடைந்து வாழ்வீர்களாக,’ என்று உலகினருக்கு உபதேசித்தருளினார் ஸ்வாமியின் குமாரர் வரதகுரு.

இந்த மாதம் ஒன்பது நாட்கள் நடைபெறும் நவராத்ரி உத்ஸவத்தில் திவ்யதம்பதிகளின் திருக்கோலங்கள் காண்பவர் கண்களைப் பறிக்கும் விதமாக நடைபெறும்.

மேலும் இந்த மாதத்தில் நம் ஸந்நிதியில் வருஷ ப்ராயச்சித்த உத்ஸவமான திருப்பவித்ர உத்ஸவம் புரட்டாசி பூர்ணிமையில் தொடங்கி ஏழு நாட்கள் உபய வேத கோஷ்டியுடன் மிகவும் விலக்ஷணமாகவும் வைதிகமாகவும் நடைபெறும்.

இந்தப் பெருமைகளைக் கொண்ட இம்மாத தேசிக சந்தேசம், நம் ஸந்நிதியில் ஆவணி மாதத்தில் நடைபெற்ற வைபவங்களுடன் சிறப்புக் கட்டுரைகளுடனும், வழக்கமான ஆங்கிலத் தொடர்களுடனும் உங்கள் கரங்களில்.

ஸ்ரீ:

# Special Month For Swami Desika's Devotees

## FROM THE DESK OF TRUSTEES




With the divine grace of Sri Vedantha Desika and Sri Alarmelmangai Sametha Sri Srinivasa Perumal, we are pleased to share our thoughts for the month of Purattasi through Desika Sandesam.

The previous month was a sacred one, marked by the grand Jyeshtabhishekam. Owing to this, there were comparatively fewer festivals and purappadus, except for Sri Hayagreeva Jayanthi, Sri Jayanthi, and a few other special occasions. Regular Utsavams and Panchaparvams were not conducted owing to Jyeshtabhishekam.

As we step into Purattasi, one of the most auspicious months for Srivaishnavites, we look forward to a season of devotion, festivals, and celebrations. Purattasi holds special significance as it is considered dearest to Lord Srinivasa Perumal. Devotees observe Purattasi Saturdays with fasting, special prayers, and temple visits, seeking the Lord's blessings. In our Devasthanam too, Purattasi stands out as a month of vibrant and spiritually uplifting festivities.

This month we will be blessed to celebrate:

- Navarathri Festival, glorifying Sri Mahalakshmi and culminating in Mahanavami and Vijaya Dasami.
- Annual Swami Desikan Utsavam, a highlight of our Devasthanam, when we cherish and relive the life, works, and contributions of our illustrious Acharya.
- Pavithrotsavam, the annual purification ritual of the temple, performed with devotion to uphold the sanctity and prosperity of all our rituals and festivals.

These occasions will bring together devotees in large numbers to participate in the divine celebrations, seeking spiritual enrichment and the blessings of our Lord and Acharya.

The Trustees will also, in the forthcoming issue, present a detailed account of the activities, developments and arrangements planned in connection with the proposed Samprokshanam of our temple. We humbly request all devotees to extend their wholehearted support, involvement and contribution to make this sacred event a grand success.

We look forward to your continued participation in all our festivals and temple activities. Let us together offer our prayers and service at the divine feet of Sri Srinivasa Perumal and Swami Vedantha Desika. ❈

ஸ்ரீ:

# விச்வாவஸு வருட புரட்டாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஸெப்டம்பர்/ அக்டோபர் | புரட் டாசி | | | | | |
| 17.09.2025 | 1 | ஏகாதசி | புதன் | புனர்வஸு | குலசேகராழ்வார் | |
| 18.09.2025 | 2 | த்வாதசி | வியாழன் | புஷ்யம் | திருமால்வடை | |
| 19.09.2025 | 3 | த்ரயோதசி | வெள்ளி | ஆயில்யம் | திருமால்வடை | |
| 20.09.2025 | 4 | சதுர்தசி | சனி | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 21.09.2025 | 5 | அமாவாசை | ஞாயிறு | பூரம் | ஆண்டாள் | |
| 23.09.2025 | 7 | த்விதீயை | செவ்வாய் | ஹஸ்தம் | நவராத்ரி உத்ஸவம் 1-ம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள், தாயார் பத்தி உலாத்தல் | ஸ்ரீ V. சேஷாத்ரி |
| 24.09.2025 | 8 | த்ருதீயை | புதன் | சித்திரை | நவராத்ரி உத்ஸவம் 2-ம் நாள். | ஸ்ரீ K.R. ஸ்ரீநிவாஸன் |
| 25.09.2025 | 9 | சதுர்த்தி | வியாழன் | ஸ்வாதி | நவராத்ரி உத்ஸவம் 3-ம் நாள் | ஸ்ரீ D. ஸுந்தரவரதன் குடும்பத்தினர் |
| 26.09.2025 | 10 | சதுர்த்தி / பஞ்சமி | வெள்ளி | விசாகம் | நவராத்ரி உத்ஸவம் 4-ம் நாள். | ஸ்ரீ N.R.S. ராமக்ருஷ்ணன் குடும்பத்தினர் |
| 27.09.2025 | 11 | பஞ்சமி | சனி | அனுஷம் | நவராத்ரி உத்ஸவம் 5-ம் நாள். | ஸ்ரீ M.K. ராமஸ்வாமி குடும்பத்தினர் |
| 28.09.2025 | 12 | ஷஷ்டி | ஞாயிறு | கேட்டை | நவராத்ரி உத்ஸவம் 6-ம் நாள். | ஸ்ரீ ராகவன் |
| 29.09.2025 | 13 | ஸப்தமி | திங்கள் | மூலம் | நவராத்ரி உத்ஸவம் 7-ம் நாள். | ஸ்ரீ K.S. ஸேதுராமன் குடும்பத்தினர் |
| 30.09.2025 | 14 | அஷ்டமி | செவ்வாய் | பூராடம் | நவராத்ரி உத்ஸவம் 8-ம் நாள். | ஸ்ரீமதி அலமேலு ராமபத்ரன் |
| 01.10.2025 | 15 | நவமி | புதன் | உத்திராடம் | நவராத்ரி உத்ஸவம் 9ம் நாள். மஹாநவமி. காலை பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், தாயார் பத்தி உலாத்தல் | ஸ்ரீ S. நாராயணன் குடும்பத்தினர் & ஸ்ரீ T. நாராயணன் குடும்பத்தினர் |
| 02.10.2025 | 16 | தசமி | வியாழன் | ச்ரவணம் | விஜயதசமி பரிவேட்டை. மாலை பெருமாள் குதிரை வாஹன புறப்பாடு. அம்பு போடுதல் | ஸ்ரீ ஸந்தான க்ருஷ்ணன் & ஸ்ரீ A.K. முத்துஸ்வாமி |
| 13.10.2025 | 27 | ஸப்தமி | திங்கள் | திருவாதிரை | ஸ்ரீ ராமானுஜர் | |
| 14.10.2025 | 28 | அஷ்டமி | செவ்வாய் | புனர்வஸு | ராமர் திருமஞ்ஜனம், ஆஸ்தானம் | |
| 15.10.2025 | 29 | நவமி | புதன் | புஷ்யம் | திருமால்வடை | |
| 16.10.2025 | 30 | தசமி | வியாழன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 17.10.2025 | 31 | ஏகாதசி | வெள்ளி | மகம் | காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு, தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ S. அருண் |
| குறிப்பு: 23.09.2025 முதல் 02.10.2025 வரை ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம். 06.10.2025 முதல் 12.10.2025 வரை பவித்ரோத்ஸவம் | | | | | | பத்ரிகைகள்: பக்கம் 14 முதல் 17 வரை |

ஸ்ரீ:

# அமிருதாஸ்வாதினியில் ஓர் அனுபவம்

ஸ்ரீ உ.வே. வித்வான் கூத்தப்பாக்கம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம், வைகுண்டவாஸீ

புருஷார்த்தம் பெற ஆசார்யன் அவசியம். ஆசார்யனென்பவன் எப்படிப்பட்டவன்? இங்கு ப்ரமாணம் கூறுகிறது. நமக்குள்ள உள்ளிருட்டை நீக்குபவனே ஆசார்யன். அதாவது நல்ல அறிவைப் புகட்டி அஹங்கார மமகாரங்களைக் கழித்துவிடுகிறவனே குரு என்று.

அஹங்கார மமகாரங்களைக் கழிக்க உபதேசிக்குமிடத்து நீர் நுமது என்றிவை வேர் முதல் மாய்த்து, (அஹங்காரம் எனப்படும் 'நான்' என்கிற எண்ணத்தையும், மமகாரம் எனப்படும் 'நமது' என்கிற எண்ணத்தையும் வேருடன் ஸவாஸநமாக களைந்தொழித்து) என்று பாசுரமிடுகிரார் ஆழ்வார்.

இங்கு 'நான்', 'எனது' என்று உச்சரித்தாலும் 'எங்கு அஹங்கார மமகாரங்கள் தன்னைப் பற்றிக் கொண்டு விடுமோ' என்ற பீதியால் இப்பாசுரத்தில் அந்த ப்ரயோகத்தைத் தவிர்த்து, 'நீர்', 'நுமது' என்று ப்ரயோகித்தாரென்று இப்பாசுர வ்யாக்யானம். இதனால் அஹங்கார மமகாரங்கள் மிகக் கொடியவை. அவை புருஷார்த்த ப்ரதிபந்தங்கள் என்று தேறுகிறது. ஆகவே, ஸதுபதேச மூலம் அறிவைப் புகுத்தி, 'நான்', 'நமது' என்ற எண்ணங்களைக் கழித்துவிடுபவனே ஆசார்யனென ஸித்திக்கும்.

ப்ரக்ருதம் அறிவென்பது அத்யாத்ம சாஸ்த்ரத்தால் ஏற்பட்டதே விவக்ஷிதம். மற்றதோவெனில் அமையாவிவையெனும் ஆசையினால் அறுமூன்றுலகில் தொகையிவை' என்று பாண்டித்யத்தைக் கணக்கிடவே உபயோகிப்பதால் அவிவக்ஷிதம்.

இங்கு அறியவேண்டியதில் ஸதாசார்யனெனப்படுவான் கல்வியைப் பயிலுதல், அதன் பொருளறிதல், அது கூறியபடி நடத்தல், பிறரை நடப்பித்தல் என்கிற இப்படிகளிலே ஜ்ஞான பரிபாகம் மிகுந்தவனே.

சாஸ்த்ரம் கூறினபடி அனுஷ்டானம் இல்லையேல் ஸம்பாதித்த ஜ்ஞானம் வ்யர்த்தம். குஹ்ய ப்ரதேசத்தை மறைக்கவோ, தன்னுடம்பில் அமரும் ஈ, கொசுக்களை ஓட் டவோ பயன்படாத ச்வாநவாலம் (நாய்வால்) போலவே திருஷ்டாம்சத்திலும் பயனில்லை. அத்ருஷ்டாம்சத்திலும் பயனில்லை. இதைக்கொண்டுதான் 'கற்க கசடு அறக் கற்பவை; கற்றபின் நிற்க அதற்குத் தக' என்றது குறள்.



இப்படியாக ஸ்வானுஷ்டானம் அவச்யமென்பதுபோல், ஆசார்யனுக்குத் பிறரை அனுஷ்டிப்பிப்பதும் அவச்யமாகிறது. இவ்விஷயத்தில் 'திருத்திப் பணிகொள்வான்' போன்றவை ஸ்மரிக்கத்தக்கவை.

கீழ்க்கூறிய ஜ்ஞான பரிபாகங்கள் ஆசார்யனுக்குத் தேவையாகின்றன என்பதை,

*ஆசிநோதிஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரேஸ்தாபயத்யபி|*
*ஸ்வயமாசரதேயஸ்மாத் தஸ்மாத் ஆசார்ய உச்யதே||*

என்ற ப்ரமாணம் பேசிற்று.

ந்யாஸ விம்சதியோவெனில் ஆசார்யனுக்கு இருக்க வேண்டிய அம்சங்களை பலவாகப் பேசுகின்றது. அவ்வம்சங்களுள் 'தயாளும்' என் சொல்லால் போதிக்கப்பட்ட இரக்கமே ஆசார்யகத்துக்கு ப்ரதானம். இதன் சிறப்பையே தனிப்பாட்டால் உதாஹரிக்கிறார். அப்பாசுரம் கீழ்வருமாறு:

*பரக்கும் புகழ் வரும் பைம்பொருள் வாய்த்திடும் பத்தர்களாய்*
*இரக்கின்றவர்க்கிவை ஈந்தால் அறம் உளதென்றியம்பார்*

*கரக்கும் கருத்துடைதேசிகர் கன்றென நம்மை எண்ணிச்*
*சுரக்கும் சுரவிகள் போல் சொரிகின்றனர் சொல் அமுதே.*
(அமிருதாஸ்வாதினி - 14)

இதன் பொருளாவது உலகத்தில் விரும்பக்கூடியவை மூன்று. அவைகளுள் **தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று** என்று பேசப்படும் க்யாதி. **ஸர்வம் அர்த்தவதா ஜிதம்** என்று உலகநடையறிந்த கவிஞனால் போற்றப்பட்டும், தைத்திரீயத்தில் **தஸ்யே யம் ப்ருதிவீஸர்வாவித் தஸ்யபூர்ணாஸ்யாத்** (பணத்தினால் நிறைந்த பூமியைப் படைத்திருப்பவன் மானுஷானந்தத்தில் ஒரு பங்கை அடைகிறான்) என்று மானுஷானந்தத்திற்கு ஹேதுவாக ஓதப்பட்டுமுள்ள பொருள்; 2. பொருளின் ஸத்தைக்குக் காரணமான அறம், அதாவது தர்மம்; 3. இவ்விடத்தில் **சத்வாரோ வித்தாயாதா: தர்மாக்நி ந்ருப தஸ்கரா: தேஷாம்ஜ்யேஷ்டா வமாநேந த்ரய: குப்யந்திஸோதரா:** (பணத்திற்கு தாயாதிகளான தர்மம், அக்நி, அரசன், சோரன் என்ற இந்நால்வருள் ஜ்யேஷ்ட ப்ராதாவான தர்மத்தை அவமதித்தால், அதாவது தர்ம கார்யங்களில் கொஞ்சமேனும் பணம் செலவிடப் படாமலே இருந்தால் கனிஷ்ட ப்ராதாக்களான நெருப்பு, அரசன், சோரன் என மூவருடைய கோபத்திற்கும் ஆளாகிறது அப்பணம். அவர்களால் அப்பணத்திற்கு விபத்து ஏற்படுகிறது) என்ற பீஷ்மவாக்கியம் நினைக்கத் தக்கது.

விச்வாஸத்துடன் இரந்தார்க்கு உபதேசித்தால் தருமமுள்ளதாயினும் முன் கூறிய மூன்று பயன் களையும் கருதாமல் கேவலம் கருணையினாலேயே உபதேசிப்பவர்கள் ஆசார்யர்கள் என்கிறது பாசுரத்தின் பூர்வகண்டம். உத்தரகண்டமோ, முன்சொன்ன காருண்யத்தையே த்ருஷ்டாந்தத் தையிட்டு திருடீக்கரிக்கிறது.

'பசுக்கள் கன்றுக்கிறங்கி பால் சொரிவது போல் நமக்கிரங்கி ஆசார்யர்கள் சொல்லமுதைப் பொழிகின்றனர். அதாவது, உபதேசிக்கின்றனர்' என்று இக்கண்டத்தின் பொருள்.

பசுக்கள் கன்றுக்குப் பால் சொரிவது கேவலம் தயையினால். புகழையோ, பொருளையோ, தர்மத்தையோ விரும்பியன்று. ஏனெனில் புகழ் முதலானதினால் அவை ஸாதிக்கக்கூடியது என்ன? பொருளைச் சேமித்து எங்கு வைத்துக்கொள்ளுகிறது? எப்படி வினியோகிக்கிறது? பருகு நீரும் தின்னும் தீனியுமளிக்க யஜமானனிருக்க பொருளாலாக வேண்டியது தான் என்ன? ஹிதாஹிதஜ்ஞான சூன்யமான கோக்களுக்கு தர்மத்தில் தான் ராக ப்ரஸக்தி ஏது? தர்ம அதர்மங்களைத் தெரிய எந்த குருவிடம் எந்த சாஸ்த்ரங்களை அப்யஸித்திருக்கிறது? கிருத்யாகிருத்ய ஜ்ஞானமற்றதான கோவினத் திற்கு தன் கடைசி காலத்தில் நீரும் தீனியுமளித்து தன் கன்றுகள் தனக்குதவும் என்று எண்ண ப்ரஸக்திதானுண்டா? ஆகையால் கன்றின் வளர்ச்சியே தன்பேறாகக்கருதி கேவலம் கருணையினால் கோக்கள் கன்றுக்குப் பாலளிக்கின்றன. இதுபோலவே தான் நம்மாசார்யர்களும். பசுக்கள் பாலமுதையளிக்கின்றன. ஆசார்யர்களோ சொல்லமுதை.இவ்வளவுதான் வாசி. இரண்டு இடத்திலும் காரணம் கருணைதான் என்று திருஷ்டாந்தத்தைக் கொண்டு கருணையை நம் ஆசார்யர்களிடம் திருடீகரித்தது உத்தர கண்டம்.

இப்பாசுரத்தில் 'கரக்கும்' என்ற பதத்தால் ஆசார்யர்களுக்குள்ள ஸ்ம்ப்ரதாயார்த்த ஸம்ரக்ஷண ஸ்வபாவம் பேசப்படுகிறது.

உபதேசத்திற்கு அபாத்ரரிடம் ஒருபடியாலும் உபதேசிக்கமாட்டார்கள். சுரப்பை அடக்கவேணு மென்று எண்ணினால் எப்படி அடக்கியே விடுமோ பசுக்கள், அதுபோலவே நம் ஆசார்யர்களும். உபதேசிக்கக்கூடாது என்று எண்ணினால் அபாத்ரர்களுக்கு உபதேசியார்கள் என்று கருத்து. இனி இப்பாசுரத்தில் ஸ்தாலீபுலாக ந்யாயமாக சில இடங்களில் பத ஸ்வாரஸ்யங்களை அனுபவிப் போமாக!

**'நம்மை எண்ணி'** என்ற இடத்தில் நம்மை என்ற பன்மை ஸதாசார்ய ஸம்பந்தத்தால் ஆத்மா ஸத்தைப்பெற்ற பஹுமானத்தினால், 'சுரக்கும்' என்றவிடத்தில் **ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப மாற்றாதே பால்சொரியும்** என்ற கணக்கில் சிஷ்யனுக்கு க்ரஹண ஸாமர்த்யம் வேண்டுமே தவிர்த்து, ஆசார்யர்களுடைய ஜ்ஞானச் சரக்குக்குக் குறைவில்லை என்று த்வனி.

**'சொரிகின்றனர்'** என்றவிடத்து நிகழ்கால வினையால் நாம் நம் ஜ்ஞானத்தை ப்ரகாசப்படுத்தும் காலங்களில் ஆசார்யனை எதிரிலிருப்பதுபோல் அனுஸந்தித்தே பிரகாசப்படுத்த வேண்டுமென்று சுவைக்கப்படுகிறது.

**'சொல்லமுதே'** என்றவிடத்து தேஹதாரணத்திற்கு பாலமுது. ஆத்மதாரணத்திற்கோ சொல்லமுது என்று ரஸம்.

**'அமுதே'** என்று, சொல்லை அம்ருதமாகக் கூறினதால் அமிழ்தத்தைப் பொழிவது போல் போக்யதமார்த்தங்களை பொழிகின்றனர் என்று ஆசார்யர்களின் உபதேச வைலக்ஷண்யத்திற்கு த்வனி.

**'சொரிகின்றனர்'** என்ற நிகழ்காலச் சொல்லுடன், **பக்தாமிருதம்... சடகோபவாங்மயம்** என்றதையொட்டி ஆழ்வார் ஸ்ரீஸூக்திக்கு ஸ்மாரகமாயுள்ள 'சொல்லமுதே' என்ற பதச் சேர்த்தியால், ஸ்ரீ 44-வது பட்டத்து அழகியசிங்கர் செவிக்கினிய செஞ் சொல்லான ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை சிறுவர்களைப் பயிலச்செய்து ஸாத்விகோத்தமர்களுடைய

செவிக்கு அமுது ஊட்டிவருவது ஸ்ம்ருதமாகிறது.

இப்பாசுரத்தில் மற்றொரு ரஸமான அர்த்தம் கேண்மின்! பூர்வார்த்தத்தில் **தஸ்ய நாம மஹத்யச:** என்று பெரும்புகழாகப் பேசப்பட்டும் **அநபாயமஹாநிதிம்** என்று பைம்பொருளாக துதிக்கப்பட்டும், **க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்** என்று தர்மமாக நிரூபிக்கப்பட்டுமுள்ள ஸர்வேச்வரனே வந்து யாசித்தாலும் முறை தப்பி ரஹஸ்யார்த்தங்களை வெளியிடார்கள் ஆசார்யர்கள் என்று பொருள் த்வனிக்கிறது. உத்தரார்த்தத்தில் ஸர்வேச்வரனுக்கே வெளியிடாதவர்கள் அவன் விபூதியான அடியார் திறத்து வெளியிடுகின்றனர் என்று தவனி.

இந்த யோஜனையில் 'பகவத் கைங்கர்யமும் பாகவத கைங்கர்யம் சேர அனுஷ்டிக்க அரிதானபோது பரமபுருஷார்த்த காஷ்டையான பாகவத கைங்கர்யமே உபாதேயதமம்' என்ற சாஸ்த்ரார்த்தம் ஸூசிக்கப்படுகின்றது. மேலும் ஆஜ்ஞா அனுஜ்ஞா ஸித்தமான கைங்கர்யங்களில் ஆஜ்ஞா கைங்கர்யமே ப்ரதானமென்றும் ஸூசிதம்.

இங்கு கைங்கர்யமாவது ஆசார்யர்கள் பண்ணும் உபதேசமே. இது பகவதாஜ்ஞா ஸித்தமாகையால் ஆஜ்ஞா கைங்கர்ய ரூபம்.

இந்த ஆஜ்ஞா கைங்கர்யம் **நிஜகர்மாதி பக்த்யந்தம் ஸ்வம் ப்ரீத்யைவகாரித:** என்று ப்ரீதியோடு செய்யப்பட வேண்டுமென்பதை 'சொரிகின்றனர்' என்ற



சொல் காட்டுகின்றது. கட்டுக்கடங்காமல் பொழிவது மகிழ்ச்சி கார்யம். ஆகையால் ப்ரீதியோடு கைங்கர்யம் செய்யப்பட வேண்டும் என்ற சாஸ்த்ரார்த்த ஸ்புரணத்திற்குத் தட்டில்லையிறே.

பகவானைவிட, பகவத்ப்ரோக்த சாஸ்த்ரமே ப்ரமாணமென்று கீதை சொல்லுகிற படியால், பகவானுக்காயினும் முறைதப்பி உபதேசிக்கலாகாது என்று பூர்வார்த்தத்தில் தெளிகின்றது.

## வைணவ வழக்குச் சொற்கள் ⑬

**திருமேனி பாங்கா? ஸௌக்யமா?:** (உடல் நலம் தானே?)

**திருவாபரணம்:** அர்ச்சா மூர்த்திக்கு அணிவிக்கப் பெறும் அணிகலன் (நகை) முதலானவை

**திருவிளங்கோயில்:** பாலாலயம்

**திருத்துதல்:** (காய்கறி) நறுக்குதல், முறைப்படுத்தல், திருத்திப் பணிகொள்ளல், தடுத்தாட்கொள்ளல்

**திர்யக் புண்ட்ரம்:** திருநீறு

**திருமுன்பந்தம்:** தீவட்டி, தீவர்த்தி

**திருத்துழாய்:** துளஸி

**தினசர்யை:** அன்றாடம் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள்

**திருப்பரிவட்டம்:** பெருமாளுக்குச் சாற்றும் துணி (வஸ்த்ரம்), கச்சம் வைத்துக் கட்டிக்கொள்ளும் வேஷ்டி

**திருவாராதனம்:** பெருமாளுக்குக் க்ரமப்படி நியமங்களைச் செய்தல், பூஜை

**திருக்காவேரி:** ஆராதனத்திற்காக நீர் வைத்துள்ள பாத்திரம்

**திருமண் காப்பு:** வைணவச் சின்னம் தரித்தல், திருமண் இடுதல்

**திருவிளக்கு:** பெருமாள் எதிரே உள்ள தீபம்

**திருநாள்:** விழா, உத்ஸவம்

**திட்டி வாசல்:** கோயிலின் ப்ரதானக் கதவுக்குள்ளாகவே அமைந்துள்ள கதவுடன் கூடிய சிறிய உள்வழி

**திருமுக மண்டலம்:** (பெரியவர்களின்) முகம், முகப்பொலிவு

**திருவணையாடுதல்:** ஸேது ஸ்நாநம்

**திருமேனி:** விக்ரஹம், உருவம், சரீரம்

**திருவிலச்சினை:** சங்கு, சக்ரம் பொறித்தல், அதன் அடையாளம்

**திருநக்ஷத்ரம்:** ஆழ்வார், ஆசார்யர் பெரியோர் பெரியோர் இவர்களின் பிறந்த நாள் (மாத, நக்ஷத்ரப் படி)

**திருநாடு அலங்கரித்தல்:** இறப்பு

**'தென்னிந்திய வைணவம் – ஓர் அறிமுகம்'** நூலிலிருந்து

***(தொடரும்...)***

ஸ்ரீ:

# வேங்கடமலை விவஸாயி

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஜீவர்களாகிய நாம் நம்முடைய அநாதியான கர்ம பலன்களின் விளைவாக பல பாபங்களைச் செய்து திவ்யதம்பதிகள் முன்னே மஹா பாபிகளாய், குற்றவாளிகளாய் கூனிக்குறுகி நிற்கின்றோம். எப்படிப்பட்ட குற்றங்களைச் செய்திருக்கிறோம்? ஒன்றா, இரண்டா! சாஸ்த்ரங்களால் 'இது தீயவினை, இதைச் செய்யக் கூடாது' என்று எவையெல்லாம் பழிக்கப்பட்டனவோ, அவற்றையெல்லாம் ஒன்று விடாமல் பட்டியலிட்டுச் செய்தவர்கள் நாம். அதுவும் ஒருமுறை இல்லை ஆயிரம் ஆயிரம் முறை செய்தவர்கள். **பற்றேல் ஒன்றும் இலேன், பாவமே செய்து பாவி ஆனேன் - மற்றேல் ஒன்று அறியேன்** என்று அபாரதங்கள் மட்டுமே செய்து பழக்கப்பட்ட நம்மிடத்தில்தண்டதரனின்நிக்ரஹஸங்கல்பத்தைப் பாயவிடாமல் அவன் குளிர்ந்த கடாக்ஷத்தை நம் பால் பொழியச்செய்பவள் தயாதேவி. எண்ணற்ற திருக்கல்யாண குணங்களைக் கொண்டவன் சரண்யன். அவையனைத்தும் நிறம் பெறுவது அவள் தயையாலேயே! பெருமாளின் மற்றைக் குணங்களைப் போலில்லாமல் சேதனர்களை ரக்ஷிப்பதற்கு மட்டுமே ப்ரயோஜனமாக இருப்பதால் ஸ்வாமி தேசிகன் நூறு ச்லோகங்கள் கொண்டு திருவேங்கடமுடையானின் இக்குணத்தை மங்களாசாஸனம் பண்ணுகிறார்.

அதில் ஒரு ச்லோகம்:

*ஸமயோபநதைஸ்தவ ப்ரவாஹை:*
*அநுகம்பே க்ருதஸம்ப்லவா தரித்ரீ|*
*சரணாகதஸஸ்ய மாலிநீயம்*
*வ்ருஷசைலேச க்ருஷீவலம் திநோதி||*
(தயா சதகம் - 21)

திருவேங்கடமுடையானை ஒரு பயிர்த்தொழில் செய்யும் விவஸாயியாக பாவித்து, அவன் செழுமையான நெற்கதிர்களைக் கண்டால் எப்படிப்பட்ட ஆனந்தத்தை அடைவானோ அதனை தயாதேவியானவள் ஸ்ரீநிவாஸனுக்கு ஏற்படுத்துகிறாள் என்று ஆசார்யன் ஸாதிக்கிறார்.

விவஸாயிக்குப் பெரும் மகிழ்ச்சி எப்பொழுது ஏற்படும்?

காலம் தவறாமல் அளவாக மழை பொழிய வேண்டும். **தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி**



**பெய்து** என்று கோதாபிராட்டி காட்டியது போல அதிகமாகப் பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் பயிர்கள் வீணாகிவிடும். அதேபோல மழை வேண்டிய அளவு இல்லையென்றால் பயிர்கள் வாடி வறண்டு போகும். இப்படி இரண்டும் இல்லாமல் பயிர்கள் நன்றாகச் செழித்து வளரவும் நீர்நிலைகள் நிரம்பவும் தேவையான ஸமயத்தில் தேவையான அளவு மழை பொழிய வேண்டும்.

இப்படி இருக்கும் பொருட்டு, தக்க ஸமயத்தில் தான் விதைத்த பயிர்கள் நன்றாக வளர்ந்து, நெற்கதிர்கள் வளைந்து நன்கு செழிப்பாக, வரிசையாக இருப்பதைப் பார்ப்பது அந்த உழவனுக்கு ஆனந்தம். **மலிந்து செந்நெல் கவரிவீசும் செழுநீர் திருக்குடந்தை** — இப்படி நன்கு வளர்ந்த கதிர்கள் குனிந்து ஆராவமுதனுக்கு சாமரம் வீசுகின்றன என்று திருக்குடந்தை க்ஷேத்ரத்தின் வளமையை ஆழ்வார் கொண்டாடுவது இங்கே ரஸிக்கத்தக்கது.

உலகத்தில் தேவமாத்ருகம் —மழையை எதிர்நோக்கி இருக்கும் பூமி, மற்றும் நதீமாத்ருகம் — நதிநீரால் வளரும் நிலம் என்று இரண்டு விதமான நிலங்கள் உள்ளன. உழவன் ஒருவன் தன் நதீமாத்ருக நிலத்தை பெருமுயற்சியோடு உழுது, பண்படுத்தி விதை விதைத்து பயிர் செய்கின்றான். அதன் நல்விளைவுக்காக நதிநீர்ப் பெருக்கை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். உரிய காலத்தில் நதிநீர் வந்து பாய்ந்து, வயலை நனைத்து பயிர்கள் நன்கு செழிப்படையுமாறு செய்கின்றது. உழவன் பயிர்களின் செழிப்புக்குத் தடையாய் உள்ள களைகளைப் பறித்தெறிகின்றான். கால்நடைகள் மேய்ந்து நாசம் செய்யாமல் தடுக்க உயரமான இடத்தில ஒரு குடிலை அமைத்துக்கொண்டு அதில் அமர்ந்து பயிர்களின் விளைவை கண்காணித்தபடி இருக்கின்றான். பயிர்கள் நாளடைவில் நன்கு செழித்து வரிசை வரிசையாக வளர்ந்து வருகின்றன. இவ்வாறு பயிர்கள் செழித்து வளர்வதைக் கண்டு, தன் முயற்சி வீணாகாது பலன் தந்ததற்குப் பெருமிதம் கொள்கின்றான் அவ்வுழவன். இது உலக வழக்கு.

அவ்வாறே இங்கு பூமியைப் பயிரிடும் நிலமாகவும், திருவேங்கடமுடையானை ஒரு உழவனாகவும், கருணையாகிய தயாதேவியை நீர் வெள்ளமாகவும், ஸ்ரீநிவாஸன் திருவடியில் சரணடைந்தவர்களை செழித்த பயிர்களாகவும், உயரமான திருமலையே உழவன் உயரத்தில் அமைத்த குடிலாகவும் ஸ்வாமி தேசிகன் இங்கு ஒப்புமை காட்டுகிறார். இந்த ஒப்புமை எப்படிப் பொருந்தும் என்று அனுபவிப்போம்.

எம்பெருமானுக்கு ஸ்வாபாவிகமாகவே கருணை உண்டு. ஸ்ரீவைகுண்டத்தில் நித்ய-முக்தர்களுக்கு மத்தியில் அவனுடைய ஸௌலப்யம், ஸௌசீல்யம், அபராதஸஹத்வம் போன்ற குணங்களுக்கு வெளிப்பாடில்லாமல் இருக்கிறது. இக்கர்மபூமியில் நம்போன்ற பத்த ஜீவன்கள் படும் அவஸ்தையைக் கண்டு பொறுக்கவொண்ணாத எம்பெருமான் எப்படியாவது இவர்களை கரை சேர்க்க வேண்டும் என்று ஸங்கல்பிக்கிறான். அதனால்தான் அங்கிருந்து இ(ர)றங்கி அர்ச்சாமூர்த்தியாய் திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கிறான். மிகவும் அவசியமான நேரத்தில் பொழியும் மழை போல தயாதேவி ப்ரவாஹமாய் பாய்ந்து பெருமாளின் இந்த ஸங்கல்பத்தை பூர்த்தி செய்துவைக்கிறாள்.

ச்ரிய: பதியே கருணாமூர்த்தியாய் எழுந்தருளியிருக்க இங்கே தயாதேவி அநுக்ரஹத்தின் கார்யம் என்னென்னில், கோவிந்தன் இந்த பூமி முழுவதும் நல்வாழ்வு பெற வேண்டுமென விரும்புகின்றான். அவனிடத்தில் கருணை என்பது எப்போதும் இருந்தாலும் அதை நம்மீது வெளிப்படுத்துவதற்கு ஒரு சிறிய காரணம் (யத்ருச்சா ஸுக்ருதம்) அவனுக்குத் தேவைப்படுகிறது. அந்த யத்ருச்சா ஸுக்ருதத்தை உருவாக்குபவள் தயாதேவி. இதன் பலன்கள்:

- ஓர் ஆசார்ய ஸம்பந்தத்தை ஏற்படுத்துவது
- பொருளொன்றில்லா நம்மை அவ்வாசார்யன் உபதேசங்கள் மூலமாக விவேகம் பெறச்செய்வது
- அந்த விவேகத்தைக் கொண்டு உபாயத்தில் ஈடுபடவைப்பது
- கருணைக்கடலான நம் ஆசார்யர்கள் மூலமாக அந்த உபாயத்தை நிர்விக்னமாக செய்து வைத்து இந்த ஆத்மாவை ரக்ஷிப்பது

என்று இவையனைத்தையும் தடையில்லாமல் நிறைவேற்றி வைப்பவள் தயாதேவி. மேலும், ஸ்ரீமந்நாதமுனிகள், ஸ்வாமி ஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர் போன்ற ஆசார்யர்களை அவதாரம் செய்வித்து, மிகவும் உயர்ந்ததான சரணாகதி மார்க்கத்தை அவர்கள் மூலமாக ஸ்தாபித்து, எல்லோரும் அம்மார்க்கத்தில் இழியும்படியாகவும் செய்பவளும் அவளே.

இங்கு தயாதேவியின் உபகாரம் **க்ருதஸம்ப்லவா தரித்ரீ** என்று வர்ணிக்கப்படுகிறது. அவள் நேரத்தில் நீர் பொழிகிறாள், அதாவது சரணாகதர்களுக்காக யத்ருச்சையாக புண்ணியத்தை உண்டாக்குகிறாள். மேலும், ஸதாசார்யர்களை நமக்காக அனுப்புகிறாள்.

அதனால் பரந்யாஸம் செவ்வனே நிகழ்கிறது. **தஸ்மாத் ந்யாஸமேஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு:** என்று ந்யாஸ வித்யையாம் சரணாகதியையும், சரணாகதிக்கு முன்பு **அஸந்நேந ஸ பவதி –** எல்லாம் இருந்தாலும் ஒன்றுமில்லாதவன் என்றும் சரணாகதிக்கு பின்பு **ஸந்தமேநம் ததோ விதுரிதி** – எல்லாவற்றையும் பெற்றவன் என்று சரணாகதர்களின் பெருமையையும் ச்ருதி வாக்யங்கள் உத்கோஷிக்கின்றன. இப்படி ச்ருதி களால் கொண்டாடப்பெறும் சரணாகதி மார்கமே மோக்ஷத்தை அடைய சிறந்த வழி என்ற தெளிவான ஜ்ஞானத்தை ஏற்படுத்தி எம்பெருமானிடத்தில் நம்மை சரணாகதி பண்ணவைத்து 'ப்ரபன்னன்' என்னும் மிக உயர்ந்த பதவியை தயாதேவி நமக்கு ஏற்படுத்துகிறாள். அவள் ப்ரவாஹத்தினால் பூமி யில் இப்பெருமையுடைய சரணாகதர்கள் என்னும் பயிர்கள் பெருமளவில் வளரும்படி ஆகின்றது.

இந்தப் பயிர்கள் (சரணாகதர்கள்) பெருமளவில் வளரும்போது இவர்களுக்குத் தீயவர்களால் ஒரு தீங்கும் வராதவாறு பயிரில் **களைபோல் அசுரரைக் காய்ந்தான்** என்று ஆசார்யனே காட்டியது போல எம்பெருமான் உயரமான திருமலையில் நின்றுகொண்டு ஒரு விவஸாயி வயலில் மாளிகை கட்டி பயிரை காப்பாற்றுவது போல காவல் புரிகின்றான்.

இப்படி நல்வழிப்பட்ட ப்ரபன்னர்கள் நிறைந்த பூமி செழும் பயிர் நிறைந்த விளைநிலம் போல் நன்கு விளங்குகின்றது. இதைக் கண்டு ஸ்ரீநிவாஸன் செழித்த விளைநிலத்தைக் கண்டு மகிழும் உழவன் போல மிகவும் மகிழ்கின்றான். 'எத்தனை எத்தனை சரணாகதர்கள்! இதற்காகத் தான் நான் ஸ்ரீவைகுண்டத்தை விட்டு வேங்கடமலைக்கு வந்தேன். நான் வந்த கார்யம் நன்றாக நிறைவேறியது!' என்று பூரித்துப்போகிறார். ஆழ்வாரோவென்னில் **கண்டோம் கண்டோம் கண்ணுக்கு இனியன கண்டோம்** என்றார்.

இங்கே ஸ்ரீநிவாஸன் ஒரு உழவனைப்போல பெருமுயற்சி கொண்ட ஸமயத்தில் தயை என்னும் ப்ரவாஹம் ஓடிவந்து பூமி முழுவதும் பாய்ந்து சேதனர்களுக்கு துன்பம் வராமல் நன்மையை மட்டுமே செய்வதாக ஸ்வாமி தேசிகன் இச்ச்லோகத்தில் நிர்தாரணம் பண்ணுகிறார்.

திருமழிசைப்பிரானோவென்னில்:

*வித்துமிடல்வேண்டுங்கொலோ விடையடர்த்த*
*பத்தியுழவன் பழம் புனத்து –மொய்த்தெழுந்த*



*கார்மேகமன்ன கருமால்திருமேனி*
*நீர்வானம் காட்டும் நிகழ்ந்து.*
(நான்முகன் திருவந்தாதி - 23)

என்று உலகில் பக்தி வளரவேண்டுமென்று திருமால் பண்ணும் க்ருஷியை (உழவு) மிகவும் ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்.

இதுவரையில் பயிரிடாத, களைகள் மட்டுமே வளர்ந்திருக்கும் நிலத்தை சீர்திருத்தி பரிச்ரமப் பட்டு செப்பனிட்டு புதிதாக விதை விதைப்பது போலல்லாமல், பண்டை நாளாக முளைவித்து விளைவிக்கும் பழம்புனமாம் ப்ரக்ருதியென்னும் க்ஷேத்ரத்திலே விழுந்த விதைகள் தாமே (ஸுக்ருத விசேஷத்தால்) முளைக்கின்றன. இப்படி முளைக்கச் செய்வது தயாதேவியின் கார்யம். அப்படி முளைத்த பயிரைக் காலத்திலே காப்பதுபோல கார்மேனியன் காக்கின்றான். அதனால் பக்தியென்னும் பயிர் மிகவும் நன்றாக வளர்ந்து செழித்திருக்கின்றது என்கிறார். ஆழ்வாரின் இப்பாசுரத்தை அடியொற்றிய நம் ஆசார்ய ஸார்வபௌமனின் உவமானம் இங்கு நன்கு சுவைக்கத்தக்கது.

இப்படி திருவேங்கடமுடையானின் அநுக்ரஹம் என்னும் மழையை நம்மீது பொழிந்து, அவன் கருணை என்னும் வெள்ளத்தில் நம்மை நன்றாக நனைத்து நம் பாபங்களைப் போக்கி அவனிடத் தில் கரை சேர்க்கும் தயாதேவி, நம்மையும் அவள் ப்ரவாஹத்தில் மூழ்கடிக்கட்டும் என்று ப்ரார்த்திப்போம்!



தாயார் தங்கத்தேர்



ஸ்ரீ:





தாயார் தங்கத்தேர்









'ராமாநுஜ தயாபாத்ரம்' தனியன் திரு அவதார உத்ஸவம்





ஸ்ரீ:

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருமயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவ பத்திரிகை

கலயே ஸததம் கருணா ஜலதிம் கருணா விஷயம் கமலாதிபதே: ।
கலிவைரி ஶடாரி வசோ ரஸிகம் கவிதார்க்கிக கேஸரி ஸூரிகுரும் ॥

कलये सततं करूणा जलधिं करूणा विषयं कमलाधिपतेः
कलि वैरि शठारि वचो रसिकं कवितार्किक केसरि सूरि गुरूम्

மாமயிலைப்பதியதனில் ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ஸந்நிதியில் நாளது விஸ்வாவஸு வருஷம் புரட்டாசி மாதம் 07ம் தேதி 23.09.2025 செவ்வாய்கிழமை முதல் நடைபெறும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் வார்ஷிக மஹோத்ஸவத்திற்கு ஸகல ஆஸ்திகர்களும் எழுந்தருளி மேற்படி உத்ஸவத்தை சிறப்பித்து. ஆசார்ய ப்ரஸாதம் பெற்று ஆனந்தித்து அடியோங்களையும் தன்யராக்கும்படி ப்ரார்த்திக்கின்றோம். புரட்டாசி 16ம் தேதி 02.10.2025 வியாழக்கிழமை ஸ்ரீவேதாந்த தேசிகன் சாற்றுமுறை நடைபெறும்.

R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன், L.N. ஸ்ரீனிவாசன் தர்மகர்த்தாக்கள்

| | | | |
|---|---|---|---|
| 25.09.2025 | வியாழக்கிழமை | காலை | தங்க கருட வாஹனம் |
| 01.10.2025 | புதன்கிழமை | காலை | திருத்தேர் |
| 02.10.2025 | வியாழக்கிழமை | இரவு | சாற்றுமுறை |

**உத்ஸவ விபரம்/ நிகழ்ச்சி நிரல்**

| நாள் | உத்ஸவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 22.09.25 (திங்கள்) | ஸ்வாமி தேசிகன் கண்ணாடியறைக்கு எழுந்தருளல் | இரவு 8:00 | ஸ்ரீ. C.R. ராகவன் குடும்பத்தினர் |
| 23.09.25 (செவ்வாய்) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ. T.C. ரங்கராஜன், 2. ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் , 3. Prof. ஸ்ரீ. ரங்கராஜன் |
| | யாளி வாஹனம் | இரவு 8:00 | Electoral Board |
| 24.09.25 (புதன்) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ K. ராஜகோபால் |
| | சூர்யப்ரபை | இரவு 8:00 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ V. ராஜகோபால் |
| 25.09.25 (வியாழன்) | ஸ்ரீ பெருமாள் கருட வாகனம், ஸ்ரீ தேசிகன் தங்க கேடயம் | காலை 7:00 | 1. ஸ்ரீமதி பத்மா சாரங்கன் குடும்பத்தினர், 2. ஸ்ரீ P. ஸ்ரீநிவாஸராகவன் குடும்பத்தினர், 3. ஸ்ரீ R. பார்த்தஸாரதி |
| | ஸிம்ஹ வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ S.R.R. ஆசார்யா குடும்பத்தினர், 2. ஸ்ரீ T.P. பத்மநாபன் |
| 26.09.25 (வெள்ளி) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ.R. வெங்கடேஷ், 2. ஸ்ரீமதி ஸ்ரீநிவாஸன் |
| | சந்திரப்ரபை | இரவு 8:00 | 1. ஸ்ரீ K. பார்த்தஸாரதி, 2. ஸ்ரீ R. குஞ்சிதபாதம் (ஜோஸ்யர்) |
| 27.09.25 (சனி) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ V.A. ரகு குடும்பத்தினர், 2. ஸ்ரீ S.T. ராகவன் குடும்பத்தினர் 3. ஸ்ரீமதி கனகம்மாள் பண்டு |
| | ஹம்ஸ வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி, 2. ஸ்ரீ A. நரஸிம்மன் |
| 28.09.25 (ஞாயிறு) | சூர்ணபிஷேகம், பல்லக்கு | காலை 6:30 காலை 7:00 | 1. ஸ்ரீ V.P. ப்ரேம் குமார் 2. ஸ்ரீமதி P.R. விஜயலக்ஷ்மி பண்டு |
| | குதிரை வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் 2. தாமல் ஸ்ரீ A. லக்ஷ்மி நரசிம்மன் |

ஸ்ரீ:

கண்ணுக்கினியன

| நாள் | உத்ஸவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 29.09.25 (திங்கள்) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ V.R. ராஜகோபால், 2. ஸ்ரீ V. கண்ணன் |
| | ஸ்ரீ ஹயக்ரீவ ஆராதனம் | மாலை 4:00 | ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பரகாலமடம், மைசூர் |
| | மேனா பல்லக்கு (அக்ஷராப்யாஸ திருக்கோலம்) | இரவு 8:00 | 1. ஸ்ரீ N. நாராயணன் ராம்ஜி, 2. ஸ்ரீ சஞ்ஜீவ் செல்லப்பா, 3. ஸ்ரீ C. சந்தோஷ் |
| 30.09.25 (செவ்வாய்) | மேனா பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ மாடபூசி சுதர்ஸனம் ஐயங்கார் பண்டு 2. ஸ்ரீ S.S. ராகவன் |
| | யானை வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ G. வாசுதேவன், 2. ஸ்ரீ T.V. ராமாநுஜம் |
| 01.10.25 (புதன்) | திருத்தேர் | காலை 7:00 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கைங்கர்ய ஸபா |
| | தங்க கேடயம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ N.S. கண்ணன், 2. ஸ்ரீ C. கிருஷ்ணன் |
| 02.10.25 (வியாழன்) | *ஸ்ரீ தேசிகன் சாற்றுமுறை* | | |
| | மூலவர் திருமஞ்ஜனம் | | தேவஸ்தானம் |
| | மங்களாசாஸனம் | காலை 5:00 | 1. ஸ்ரீ S. வரததேசிகன் & ஸ்ரீ V. வெங்கடேஷ் |
| | ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ தேசிகன் புறப்பாடு | காலை 8:00 | வனபோஜனம் ட்ரஸ்ட் |
| | திருமஞ்ஜனம் | காலை 10:00 | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | பத்தி உலாத்தல் | மாலை 6:00 | |
| | ஒய்யாளி, திருப்பாவை சாற்றுமுறை, மங்களகிரி புறப்பாடு, திருவாய்மொழி சாற்றுமுறை | இரவு | |
| 03.10.25 (வெள்ளி) | கந்தப்பொடி வஸந்தம் | காலை 7:00 | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | விடையாற்றி உத்ஸவம் முதல் நாள் – திருமஞ்ஜனம் | காலை 9:30 | ஸ்ரீமதி சுபத்ரா பாலாஜி குடும்பத்தினர் |
| 04.10.25 (சனி) | விடையாற்றி உத்ஸவம் இரண்டாம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 9:30 | ஸ்ரீ S. சுந்தரம் குடும்பத்தினர் |
| 29.10.25 (புதன்) | விடையாற்றி உத்ஸவம் 27ம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 9:30 | ஸ்ரீ T. ஸ்ரீனிவாசன் & ஸ்ரீ S. பரத்வாஜ் |
| | புஷ்ப பல்லக்கு | இரவு 7:30 | ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் (பண்டு) ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர் |

(ப்ரதி தினம் காலை 9:30 மணிக்கு திருமஞ்ஜனம், மாலை 6:30 மணிக்கு பத்தி உலாத்தல் நடைபெறும்)

**Note:** 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH OR CHEQUE (in favour of **Sri Vedantha Desikar Devasthanam)**

2. Those who have not updated their contact details like mobile number, E-mail ID are requested to update the same, in order to ensure frequent and speedier communication.

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருப்பவித்ரோத்ஸவப் பத்திரிகை

## பசலி 1435 ~ விஸ்வாவஸு வருஷம் ~ 2025

## 06.10.2025 முதல் 12.10.2025 வரை

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது விஶ்வாவஸூ வருஷம் புரட்டாசி மாதம் 20ம் தேதி (06.10.2025) திங்கட்கிழமை முதல் பவித்ரோத்ஸம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிறான்.

மேற்படி உத்ஸவத்தில் வேதபாராயணம், அத்யாபகம், க்ரந்த பாராயணம் ஆகிய கைங்கர்யங்களில் ஸ்வாமிகள் அன்வயித்து, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீபேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

அங்குரார்ப்பணம் – 04.10.2025 – சனிக்கிழமை மாலை

அதிவாஸம் – 05.10.2025 – ஞாயிற்றுக்கிழமை மாலை

மஹாபூர்ணாஹூதி – 12.10.2025 – ஞாயிற்றுக்கிழமை

தினசரி ஹோமம் – காலை 8:30 மணி மற்றும் இரவு 8:15 மணி

பிரதி தினம் மாலை 6.15 மணிக்கு பெருமாள், தேசிகன் திருவீதி புறப்பாடு

R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன், L.N. ஸ்ரீனிவாசன்
தர்மகர்த்தாக்கள்

| நாள் | காலை உத்ஸவ உபயம் | காலை ததீயாராதனை உபயம் | மாலை உத்ஸவ உபயம் | மாலை ததீயாராதனை உபயம் |
|---|---|---|---|---|
| 04.102025 (சனி) | அங்குரார்ப்பணம் (மாலை)<br>ஸ்ரீ சேனைநாதன் புறப்பாடு | —— | ஸ்ரீ K.L.ராமதுரை | —— |
| 05.10.2025 (ஞாயிறு) | அதிவாஸம் (மாலை) | —— | ஸ்ரீ அத்திகிரி அருளாளன் | —— |
| 06.10.2025 (திங்கள்) | ஸ்ரீ. R. முகுந்தன் | 1. ஒலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன்<br>2. ஸ்ரீ S. ரவிச்சந்திரன் | ஸ்ரீ N.S. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ K. ராஜகோபாலன்<br>2. ஸ்ரீ N.சேஷாத்ரி |
| 07.10.2025 (செவ்வாய்) | 1. ஸ்ரீமதி ஜானகியம்மாள் பண்டு<br>2. ஸ்ரீ S.பத்மநாபன் | ஸ்ரீ K.R. ராமஸ்வாமி<br>ஸ்ரீ R. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ P.V. ராகவன் (பண்டு)<br>2. ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ N.S. வரதாச்சாரி குடும்பத்தினர்<br>2. ஸ்ரீ. N.கேசவன் குடும்பத்தினர் |
| 08.10.2025 (புதன்) | ஸ்ரீமதி பத்மா ராமானுஜம் | ஸ்ரீ S.V.S. ராகவன்<br>ஸ்ரீ. R. ராமக்ருஷ்ணன் | ஸ்ரீ A.N.S. சுந்தரம் | 1. ஸ்ரீ A.N.S. சுந்தரம்<br>2. ஸ்ரீ L.V. நரஸிம்மன் |
| 09.10.2025 (வியாழன்) | ஸ்ரீ T.V. நரஸிம்மன் | ஸ்ரீ D. சுந்தரராஜன், | ஸ்ரீ Dr. E. ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ T.M. ரவி நரஸிம்மன்<br>2. ஸ்ரீ M.P. ராஜா |
| 10.10.2025 (வெள்ளி) | ஸ்ரீ S. அருண் | ஸ்ரீ M.D. சுதர்ஸனம் ஐயங்கார் (பண்டு)<br>ஸ்ரீமதி ப்ரேமா பார்த்தஸாரதி | ஸ்ரீ N.K. ரங்கஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர் | 1. ஸ்ரீ R. சம்பத்,<br>2. ஒலக்கூர் ஸ்ரீ R. ராஜகோபாலன் |
| 11.10.2025 (சனி) | ஸ்ரீ S. சத்யநாராயணன் குடும்பத்தினர் & ஸ்ரீ N.கேசவன் குடும்பத்தினர் | ஸ்ரீ V.J. பார்த்தஸாரதி<br>ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா<br>ஸ்ரீமதி T.V. சாந்தா | 1. ஸ்ரீமதி கமலா & சுமைதாங்கி கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி R. மஹாலட்சுமி | ஸ்ரீ T.M. ராஜகோபாலன்<br>ஸ்ரீ. R. முகுந்தன் |
| 12.10.2025 (ஞாயிறு) | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. கீழச்சேரி ஸ்ரீ S. ராகவன் | ஸ்ரீ V.S. கண்ணன்<br>ஸ்ரீ R. ராகவன் | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. ஸ்ரீ. வஸந்த் ஷான்பாக் பூர்ணாஹூதி திருமஞ்ஜனம் ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி | ஸ்ரீ K. பரத்வாஜ் |

பட்டு பவித்ரங்கள் உபயம் : Dr. திலீப் க்ருஷ்ணா; பிரதி தினம் காலை, மாலை க்ஷீர கைங்கர்யம் உபயம் : ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி குடும்பத்தினர்

CONTRIBUTIONS IN KIND / CASH ARE WELCOME



சுதந்திர தின தேசியக் கொடியேற்றம்





ஸ்ரீ:

# கல்யாண குணசாலினே

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி தேசிகனின் பெருமைகளைப் பல நூல்களில் ஸ்வாமியின் திருக் குமாரர் ஸ்ரீகுமார வரதாசார்யர் அருளிச்செய்துள்ளார். அவற்றுள் ஒன்றான **ஸ்ரீமத் தேசிக தினசர்யா** என்னும் நூலில் ஸ்வாமி பஞ்சகால பராயணராய் விளங்கியதை விவரிக்கிறார்.

அதிகாலையில் விழித்து எழுந்தது முதல் இரவில் யோகம் முடிந்து சயனிக்கும் வரையிலான அவருடைய அனுஷ்டானத்தை 23 ச்லோகங்களால் வெளியிடுகிறார். அவ்வமயம் ஸ்வாமியை **ஸபாபுஜங்கீ** என்னும் ஒரு சொல்லால் அழைக்கிறார்! இதற்கு 'ஸபையைக்கண்டால் பாம்பைக் கண்டதுபோல் அஞ்சுபவர்' என்பது பொருள்! (புஜங்கீ என்னும் சொல்லுக்குப் பாம்பு என்று பொருள்).

இதைக் காண்கையில் நமக்கு வியப்பு மேலிடுகிறது! **அத்யாஸீன துரங்க வக்த்ர விலஸத் ஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸனராக** விளங்கிய ஸ்வாமி தேசிகனை, நாவின் நுனியில், பரிமுகப் பெருமானே வீற்றிருக்கும் பாக்யத்தைப் பெற்ற ஸ்வாமியை, நாவின் முழக்கினால் வாதியரை வென்று வாகை சூடிய இவ் வாசார்யோத்தமரை இவ்விதம் ஸபைக்கோழை என்று அழைப்பது நமக்கு வியப்பைத் தருகிறது! ஆனால் ச்லோகத்தை முழுவதுமாகக் கண்டால் இக்கூற்றின் உண்மை நமக்கும் புலனாகிறது!

*ஸம்பாவநா யஸ்ய ஹி காலகூட:*
*ஸபா புஜங்கீ குணபம் தருண்ய:|*
*ஸ்யாத் ரௌரவம் ராஜக்ருஹம் ஜீயாத்*
*சிரம் குரு: வேங்கடநாத நாமா||*

இவ்விடத்தில் ஸ்வாமியின் கல்யாண குணங்களை விவரிக்கிறார்! புகழ்ச்சியை ஸ்வாமி விரும்புவதில்லை, அதை காலகூட விஷம் என்றும் வீண்வாதங்களும் விதண்டா வாதங்களும் நடையாடும் ஸபை களைக் கண்டால் பாம்பைக் கண்டதுபோல் அங்கிருந்து வேகமாக அகன்றுவிடுவாரென்றும் யுவதிகளைக் காணும்போது பிணம்போல் எண்ணி ஒதுங்கிவிடுவாரென்றும் அரச மாளிகைகளை ரௌரவம் என்னும் நரகம் போல் கருதுவாரென்றும் அருளுகிறார்.

இதனை அருளிச்செய்த ஸ்வாமியின் திருக்குமாரரே பிறிதோரிடத்தில்

*ய: க்யாதி லாப பூஜாஸு விமுகோ வைஷ்ணவே ஜநே|*
*க்ரயணீய தசாம் ப்ராப்த: தஸ்மை பவ்யாய மங்களம்||*

என்றும் பாடி பாகவத சேஷத்வத்தின் எல்லை நிலமாக ஸ்வாமி விளங்கியதையும் போற்றி அருளியுள்ளார்!

கல்யாண குணங்கள் நிறைந்தவராக விளங்கியவர் ஸ்வாமி தேசிகன். ஆத்ம குண பூர்த்தியும் ஸத்வ குண பூர்த்தியும் ஸ்வாமியை அலங்கரித்திருந்ததை அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்வுகள் நமக்குக் காட்டுகின்றன.

தம்முடன் போட்டிக்கு வந்த கொத்தனையும், சில்பியையும், பாம்பாட்டியையும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராக விளங்கிய நம் ஸ்வாமி தம் திறமையால் வென்றதுடன் அவர்களுக்கு அருளுரை பலவும் அருளிச்செய்து திருத்திப் பணிகொண்டதையும் ஸ்வாமியின் சரித்ரத்தில் காணலாம்.

**விநயத்துடன் கூடியதே நல்வித்யையாகும்**

ஸ்வாமி பாதுகா ஸஹஸ்ரம் அருளிச் செய்தது அமானுஷ்யமான கார்யம் என்றால் அருளிச் செய்த இவருடைய குணநலன்களும் அமானுஷ்யமானதே! பொதுவாக மக்களிடம் காண அரிதான விநயமாகிற பணிவு என்னும் பண்பு இவரிடம் நிறைந்திருந்ததை அந்நிகழ்வால் நாம் நன்கு உணரலாம். போட்டிக்காகக் கவிபாட மறுத்துவிட்டார். போட்டியில் தனக்கு வெற்றியே கிடைத்தாலும் மனவருத்தம்தான் மிஞ்சும் என்பது ஸ்வாமியின் திருவுள்ளம்!

எம்பெருமானின் திருவடிகளைப் பாட எண்ணியுள்ள, எதிரில் நிற்கும் பரம பாகவதரான அவருக்கு வெற்றி கிட்டவில்லையானால் அவர் வெட்கித் தலைகுனிவார் அவர் மனம் வேதனையடையும். இதனால் தாம் ஒரு பாகவத அபசாரம் செய்து விட்டதாக தேசிகனின் மனமும் வேதனையடையும். எனவே வெற்றி தோல்வி இரண்டுமே தனக்கு மகிழ்ச்சியைத் தராமல் வேதனையையே தரும் என்பதால் இத்தகைய போட்டியைத் தவிர்க்க விரும்பினார்.

**மேலும் உந்நதாநாம் அவநதி: நதானாம் யத்ர சோந்நதி** என்கிறார் பாதுகா ஸஹஸ்ரத்தில்! வணங்காதவர் களுக்குத் தாழ்மையும் வணங்கியவர்க்கு உயர்வும் உண்டாகும் என்பது கருத்து. ஸ்வாமி தேசிகனை நன்கு கற்றுணர்ந்த ஸ்ரீவேங்கடாத்வரி போன்ற சான்றோர் பலரும் கூறுவதாவது 'இது சண்டைக் காக வந்த நூலில்லை. புகழுக்கும் பொருளுக்கும் பாடியதில்லை. அஹங்கார மமகாரத்துக்கு இங்கு இடமில்லை பெருமாள் ஸங்கல்பித்தார்.

திருவடியைப்பாட ஒருவர் துணிந்தபோது அத்திருவடிகளைத் தாங்கும் பாதுகைகளைப் பாடத் தன்னை அரங்கனே நியமித்தார் என்பதே தேசிகனின் திருவுள்ளம்,' என்பதை **நம் அன்பர் அறிந்து அறிவித்தனரே!.**

தம்முடைய ராமானுஜ ஸிந்தாந்தத்தைச் சேர்ந்தவர் களிடம் வாதிடுவதை சிறிதும் விரும்பாதவராகவே எழுந்தருளியிருந்தார் என்பதை ஸ்வாமியின் வைபவங்களைப் பரக்கப் பேசும் வைபவ ப்ரகாசிகா என்னும் நூல் கூறுகிறது.

எம்பெருமானின் அடியார்கள், குறிப்பாக, சிறிதும் தோஷமற்ற ராமானுஜ ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர் களுக்கு அஸூயை கூடாது என்று திருவுள்ளப்பட்டார் ஸ்வாமி.

*ஆபாத சாந்திமதுரான் புனரஸ்மதீயான்|*
*அந்யோந்ய வைரஜனனீ விஜஹாத்வஸூயா ||*

'மிகவும் மதுரமான, சாந்தர்களான நமக்குள் விரோதத்தை உண்டுபண்ணும் அஸூயை நம்மைவிட்டு விலகட்டும்,' என்று விண்ணப்பித்துக் கொள்கிறார். எனவேதான் **பரஸ்பர ஹிதைஷிணாம் - பரிஸரேஷு மாம் வர்த்தய என்று,** அதாவது ஒருவருக்கொருவர் அஸூயை கொள்ளாமல் நன்மையையே கோரும் ஸாத்விகர்களின் மத்தியில் அடியேன் வாழும்படி செய்தருள வேண்டும் என்று அபீதி ஸ்தவ ஸ்தோத்ரத்தில் எம்பெருமானிடம் ப்ரார்த்தித்துக் கொண்டார்!

தாமருளிச் செய்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் இந்த ஆத்ம குணங்களை ப்ரபந்நர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதை ஸ்வநிஷ்டாபிஜ்ஞாந அதிகாரத்தில் விரிவாகவும் மிக அழகாகவும் எடுத்துரைக்கிறார். ப்ரபத்தியை அனுஷ்டித்தவரை க்ருத க்ருத்யன் (செய்யவேண்டியதை செய்து முடித்தவன்) என்று கொண்டாடும் ஸ்வாமி அடுத்தபடியாக இப்ரபந்நன் செய்யவேண்டிய கடமைகளை உத்தர க்ருத்யம் என்றும், அக்காலத்தில் கடைப்பிடிக்கவேண்டிய ஆத்ம குணங்களையும் வழிமுறைகளையும் ஸ்வநிஷ்டையென்றும் அற்புதமாக அருளிச் செய்கிறார்.

ஒருவர் தம்மை அவமதித்தாலும் மனம் வருந்தாமல் இருப்பதுமட்டுமின்றி சாஸ்த்ரத்தில் கூறியபடி தன்னை அவமதித்த அவனுக்கு தம்முடையை பாபத்தை வாங்கிக்கொள்ள நேரிடுமே என்று அவனிடம் இரக்கம் கொள்ளுதல் மற்றும் தன்னிடமுள்ள குற்றங்களை அவன் எடுத்துக்காட்டியதற்கு அவனிடம் நன்றி பாராட்டுதல் முதலிய ஆத்ம குணங்களையே வளர்த்துக் கொள்ளவேண்டிய ஸ்வரூப நிஷ்டையாக வலியுறுத்துகிறார்.

இந்த நிஷ்டைதான் ஸ்வாமியை போட்டிகளிலிருந்தும் வீண்வாதங்களிலிருந்தும் விலகி நிற்கும் **ஸபாபுஜங்கி** யாகக் காட்டுவதை நாம் உணர்கிறோம்.

அதே சமயம் பிற மதங்களின் கண்டனத்தைத் தமது க்ரந்தங்கள் மூலமாக மறுக்கவியலாதபடி வன்மையாகக் கண்டித்து, தம் ஸித்தாந்தத்தை அசைக்கவொண்ணாதபடி ஸ்தாபித்தார்! அத்துடன் அதற்குத் தம் ரக்ஷா க்ரந்தங்களைக் கொண்டு ரக்ஷையும் கட்டி (வேலியிட்டு) காத்தருளினார்.

**ஹயக்ரீவம் உபாஸ்மஹே** என்றபடி ஸ்ரீ பரிமுகப் பெருமானை உள்ளத்துக்கொண்டு அனவரதமும் ஆராதித்தவர்.

வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் நின்றருளி க்ருபையுடன் அடியேன் உள்ளத்தில் எழுதினார் என்று அந்த பகவான் தமக்கு அருளிச்செய்த மயர்வற்ற மதிநலத்தையும் எண்ணிப் பெருமிதமும் கொண்டார்.

*தர்கேஷு கர்கஶதியோ வயமேவ நான்யே*
*காவ்யேஷு கோமளாதியோ வயமேவ நான்யே|*
*தந்த்ரேஷு நிஸ்சிததியோ வயமேவ நான்யே*
*க்ரு'ஷ்ணே நிவேஶிததியோ வயமேவ நான்யே||*

என்பது ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த ஒரு முக்தக ச்லோகம்! இதன் பொருளாவது: தர்க்கத்தில் கூர்மையான புத்தியுடையவர் என்னைத் தவிர வேறொருவரில்லை; காவ்யங்களில் ம்ருதுவான புத்தியுடையவர் என்னைத் தவிர வேறொருவரில்லை; ஸித்தாந்தங்களில் தீர்மானமான புத்தியுடையவர் என்னைத் தவிர வேறொருவரில்லை; க்ருஷ்ணபகவானிடத்தில் ஈடுபட்ட புத்தியையுடையவர் என்னைத் தவிர வேறொருவரில்லை என்பதாகும்!

ஸாத்விக அஹங்காரத்துடன் ஸ்வாமி இவ்விதம் அருளிச்செய்வது காண்கையில் பவ்ய குணத்து டன் காம்பீர்யமும் சேராச்சேர்த்தியாக அவரிடம் குடிகொண்டிருந்ததை நாம் கண்டு மகிழலாம்!

ஈச்வரனையொழிய தானும் பிறரும் தனக்குத் தஞ்சமன்று என்னும் உறுதியுடன் இருந்ததுடன் தம் ஆத்ம குணத்தை வெளிப்படுத்தி அவற்றை நமக்கும் உபதேசித்தருளி உத்தம ஆசார்யனாக விளங்கினார்!. கவிதார்க்கிக ஸிம்ஹமான ஸ்வாமி தேசிகன் கல்யாண குணங்கள் நிறைந்தவராக விளங்கியதுகொண்டு ஸ்வாமியின் குமாரர் ஸபாபுஜங்கீ என்று அவரை அழைத்தது சாலவும் பொருந்தும் என்பதை நாமும் உணர்கிறோம்.

# நம் ஆழ்வாரும் கோபிகைகளும்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

**அறியாதவிடைச்சியருமறியும்** *வண்ணம்*
*அம்புயத்தாளுடனந்நாளவதரித்த*
*குறையாதுமில்லாத கோவிந்தா* **நின்**
**குரைகழற்கீழ் அடைக்கலமாம்** *குறிப்புத் தந்தாய்...*
*[ஆசார்யன் தேசிகன் - அம்ருதாஸ்வாதினி - 12]*

ஆச்ரிதர்கள் அனைவருக்கும் புநர் ஜன்மமற்ற நிலையினை அருள்வது சரணாகதி **(நின் குரை கழற்கீழ் அடைக்கலம்)** என்பதை உணர்த்தும் இந்தப் பாசுரம், பரிபூர்ணமான சரணாகதியின் அடையாளமாக விளங்கும் ஆய்ச்சியரை **(அறியாதவிடைச்சியருமறியும்)** முன்னிட்டுத் தொடங்குகிறது.

**அறியாதது - ஜ்ஞானமா (அ)ஜ்ஞானமா?**

*நகலு கோபிகா க்ருஷ்ண நந்தனோ பவான்*
*அகில தேஹினாம் க்ருஷ்ண அந்தராத்மத்ருக்|*
*விகள ஸார்த்திதோ க்ருஷ்ண விச்வகுப்தயே*
*ஸக உதேயிவான் க்ருஷ்ண ஸாத்வதாம் குலே||*

(ஸுகப்ரஹ்ம மஹர்ஷி பரீக்ஷித் மஹாராஜாவுக்கு உபதேசித்த ஸ்ரீமத்பாகவத ஸ்காந்தம் 10 - கோபிகா கீதம் - ச்லோகம் 4)

க்ருஷ்ணா! இடைச்சேரியான இங்கு வந்து பிறந்திருப்பதனால் நீ சாதாரணமானவன் அல்லன். அனைத்து ஜீவராசிகளுக்கும் அந்தராத்மாவாக இருப்பவன் நீ என்பதை நாங்கள் அறிவோம். லோக ரக்ஷணத்திற்கெனக் கொண்டாலும் நீ அவதரித்ததே எங்களுக்காகத்தான் என்கின்றனர் கோபிகைகள்.

இப்படி, எம்பெருமானின் அவதாரம் பற்றின தேவ ரஹஸ்யத்தினை நன்கு அறிந்திருந்த கோபிகைகள், லோகாயதமான விஷயங்களின் மீது பற்றறுத்து, பரப்ரஹ்மமான (ஸத்ய ஜ்ஞானம்) ஸ்ரீக்ருஷ்ணனையே அபேக்ஷித்ததனால், (அ) ஜ்ஞானம் **அறியாதவிடைச்சியர்.**



**கோபிகைகள் உண்மையில் ஜ்ஞானிகளே**

ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்த போதில் ச்ருதிசரிகள், ரிஷிகள், கோபகந்யைகள், தேவகந்யைகள் ஆகியோர் கோபிகைகளாக ஜனித்தனர்.

1. கோலோகத்தில் வசிப்பவர்களான கோபஸ்த்ரீகளைப் போல எம்பெருமானின் மீது அளவில்லாத ப்ரேமமுற்று அவனை அநுபவிக்க விரும்பிய ச்ருதிசரிகள் (வேதாபிமான தேவதைகள்) கோபிகைகளாக ஜனித்தனர்.
2. ராமாயண காலத்தில் ஸ்ரீராமனை முழுவதுமாக அநுபவிக்க முடியாததினால் அவனை அணுவணுவாக ரசிக்க வேண்டி தபஸ்விகள் (ரிஷிகள்) கோபிகைகளாக ஜனித்தனர்.
3. ஸதா எம்பெருமானையே நினைத்து தம் நிலை மறந்துருகும் கோபகந்யைகள், அவனுடனான திருமேனி ஸம்பந்தத்தினை அபேக்ஷித்து அவன் ஸ்ரீக்ருஷ்ணனாக வந்த போதில் கோபிகைகளாக ஜனித்தனர்.
4. எம்பெருமான் ஸ்ரீக்ருஷ்ணனாக பூமியில் அவதரிக்கப் போகின்றான். அவனது பத்நிகளாக அவதரிக்க வேண்டுமென்ற சதுர்முகனின் அறிவிப்பினைத் தொடர்ந்து தேவகன்யைகளான அப்ஸரஸ் ஸ்த்ரீகள் கோபிகைகளாக ஜனித்தனர்.

இப்படியாக, பரமாத்ம ஸ்வரூபத்தினை அடைவதற்காகவே ஜனித்தவர்கள், தத்தம் க்ருஹங்கள், பந்து ஜனங்கள், ஆசாபாசங்கள் அனைத்தையும் துறந்து, ஸ்ரீக்ருஷ்ணனுடனான கூடலில் ஸந்தோஷித்தனர். தனது ஸ்வரூப ஸ்வபாவ குண மாதுர்யாதிகளை வெளிக்காட்டுவதற்கு ஏற்ற காலம் அமைந்ததை எண்ணி ஸ்ரீக்ருஷ்ணனும் தனது புல்லாங்குழலில் 'க்லீம்' எனும் பீஜத்தினை வாசித்து, அவர்களைத் தன் வசப்படுத்தி, அவர்களுடன் சேர்ந்து கூத்தாட, இந்தப் பேரானந்த அநுபவமே ராஸலீலை ஆயிற்று.

ஆக, ராஸலீலையாவது பகவானை அடைந்துவிடத் துடிக்கும் ஜீவனுக்கும், ஜீவனை அடைந்துவிடத் துடிக்கும் பரமாத்மனுக்கும் ப்ராப்தமாகும் ஸந்தோஷாநுபவமே.

**நம்மாழ்வார் பாசுரங்களில் ராஸலீலை**

கோபிகைகள் பெற்ற க்ருஷ்ணானுபத்தை

கோபிகையாக அநுகரித்துத் தானும் பெற்றதை திருவாய்மொழியின் பற்பல பதிகங்கள் மூலம் நம்மாழ்வார் உணர்த்துகிறார்.

அஞ்சிறைய மடநாராய் (1.4) - **எம்பெருமானை விரும்பி**

இவையும் அவையும் (1.9) - **அவனை நேசித்து**

வாயும் திரையுகளும் (2.1) / ஊரெல்லாம் துஞ்சி (5.4) / மல்லிகைக் கமழ் (9.9) - **அவன் மீது விரஹ தாபம் கொண்டு**

ஊனில் வாழுயிரே (2.3) - **அவனிடம் வசப்பட்டு**

ஆடி ஆடி அகம் கரைந்து (2.4) / மையார் கருங்கண்ணி (9.4) - **அவனை அடையத் துடித்து**

வைகுந்தா (2.6) - **அவனை மகிழ்விக்கவே வாழ்ந்து**

முடிச்சோதியாய் (3.1) / பிறந்தவாறும் (5.10) / குரவை ஆய்ச்சியர் (6.4) - **அவனை / அவனது லீலைகளை அநுபவித்து**

புகழுநல் ஒருவன் (3.4) / மண்ணையிருந்து (4.4) - **எதிலும் அவனைக் கண்டு**

மொய்மாம்பூம்பொழில் (3.5) - **பக்தியில் ஆடிப்பாடி**

சீலம் இல்லாச் சிறியன் (4.7) / பாமர மூவுலகம் (7.6) - **அவனைக் கூவி அழைத்து**

மாசறு சோதி (5.3) - **அவனை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு**

கடல் ஞாலம் (5.6) - **பக்தி பீறிட்டு வெளி வர**

மானேய் நோக்கு (5.9) - **அவனது தர்சனம் பெற ஏங்கி**

மின்னிடை மடவார் (6.2) – **அவனை ஸ்வப்னத்தில் கண்டு**

மாலுக்கு (6.6) - **அவனிடம் மனதினைப் பறிகொடுத்து**

உண்ணும் சோறு (6.7) - **அவனை தரிசிக்க ஓடிச் சென்று**

நீராய் நிலனாய் (6.9) / தேவிமாராவார் (8.1) / மாயக்கூத்தா வாமனா (8.5) / பண்டை நாளாலே (9.2) - அவனைக் காண்பதற்குத் துடித்து

ஏழையர் ஆவி (7.7) **- அவனை அங்கமங்கமாக தரிசித்து**

ஓராயிரமாய் (9.3) - **பரிபூர்ணமாகத் தன்னை அவனுக்கு அர்ப்பணித்து**

இன்னுயிர்ச் சேவலும் (9.5) - **அவனிடம் ஊடல் கொண்டு**

வேய்மரு தோளினை (10.3) - **அவனை விட்டுப் பிரியாதிருந்து**

சார்வே தவ நெறிக்கு (10.4) - **அவனது குணானுபவம் செய்துகொண்டு**

கண்ணன் கழலிணை (10.5) - **அவனது திருவடியினைப் பற்றிக்கொண்டு**

எம்பெருமானை ஆச்ரிதர்கள் அடைவதற்கான வழிமுறையினைத் தெள்ளத் தெளிவாகக் காண்பிக்கும் இத்தகைய திருவாய்மொழிப் பதிகங்களை வரிசைப்படுத்திப் பார்த்தோமானால், கோபிகைகள் ஸ்ரீக்ருஷ்ணன் மீது கொண்டிருந்த **(ஆச்ரிதர்கள் எம்பெருமான் மீது கொள்ள வேண்டிய)** நேசம், பக்தி, ப்ரேமம், ஆசை, காதல் என்று அனைத்தும் ஒரே சேர ஸேவையாகும்.

எம்பெருமானை நேசித்து, அவன் மீது விரஹ தாபம் கொண்டு, அவனிடம் வசப்பட்டு, அவனை அடைய ஏக்கம் கொண்டு, அவனை மகிழ்விக்கவே வாழ்ந்து (பகவத் ப்ரீத்யர்த்தம்), அவனை/அவனது லீலைகளை அநுபவித்து, எதிலும் அவனைக் கண்டு, பக்தியில் ஆடிப்பாடி அவனைக் கூவி அழைத்து, அவனை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு, பக்தி பீறிட்டு வெளிவர, அவனது தர்சனம் பெற ஏங்கி, அவனை ஸ்வப்னத்தில் கண்டு, அவனிடம் மனதைப் பறிகொடுத்து, அவனை தர்சிக்க ஓடிச் சென்று, அவனை காண்பதற்குத் துடித்து, அவனை அங்கமங்கமாக தர்சித்து, பரிபூர்ணமாகத் தன்னை அவனுக்கு அர்ப்பணித்து, அவனிடம் ஊடல் கொண்டு, அவனை விட்டுப் பிரியாதிருந்து, அவனது குணானுபவம் செய்து அவன் திருவடியினைப் பற்றிக் கொள்ளல் வேண்டும்.

**கோபிகையாகும் நம்மாழ்வார்**

கோபிகைகள் பெற்ற திவ்யாநுபவத்தை பராங்குச நாயகியாக தன்னை பாவித்து நம்மாழ்வார் பெற்றார். இதனைத் திருவாய்மொழியின் இரண்டு பாசுரார்த்தங்களில் அந்வயித்து உவகைக் கொள்வோம்.

**முதல் வ்ருத்தாந்தம்**

*மல்லிகை கமழ் தென்றல் ஈரும் ஆலோ*
*வண் குறிஞ்சி இசை தவரும் ஆலோ*
*செல்கதிர் மாலையும் மயக்கும் ஆலோ*
*செக்கர் நன் மேகங்கள் சிதைக்கும் ஆலோ*
*அல்லி அம் தாமரைக் கண்ணன் எம்மான்*
*ஆயர்கள் ஏறு அரி ஏறு எம் மாயோன்*
*புல்லிய முலைகளும் தோளும் கொண்டு*
*புகலிடம் அறிகிலம் தமியம் ஆலோ* [9-9-1]

மாலைப்பூசல் என்றறியப்படும் இந்தப் பாசுரம், ஸ்ரீக்ருஷ்ணன் பசுக்களை மேய்ச்சல் முடிந்து அழைத்து வருகையில் கோபிகைகள் படும் பாட்டினை விவரிக்கிறது.

அதிகாலைப் பொழுதில் பசுக்களை மேய்ச்சலுக்குக் கூட்டிச் செல்லும் ஸ்ரீக்ருஷ்ணன் மாலை வேளையில் அவற்றை மீண்டும் தத்தம் க்ருஹங்களுக்கு ஓட்டி வருவான். சில நாட்கள் அவனது புல்லாங்குழல் சத்தம் மட்டும் முன் வந்து சேர, அவன் வந்து விட்டான் என்று நினைத்து அவனைக் காண்பதற்கு ஆசையாசையாக ஓடி வரும் கோபிகைகள் அவனைக்

காணாது துணுக்குறுவர். சில நாட்கள், அவனது பசுக்கள் மட்டும் அவனுக்கு முன்னே ஓடி வந்து சேரும். பசுக்களை கண்டவுடன் ஸ்ரீக்ருஷ்ணன் வந்து விட்டான் என்று அவனைக் காண ஆவலுடன் வரும் கோபிகைகள், அவன் வரவில்லை என்பதை அறிந்து க்லேசம் கொள்வர். சூரியன் அஸ்தமிக்கும் வேளையில் மல்லிகை மணத்துடன் வீசும் தென்றல் காற்று அவனுடனான சேர்த்திக்கு ஏங்கும் அடியாளது தாபத்தினை கூட்டுகிறதே. அவனுடனான கூடலும் விலகலும் என்னை இப்படி அலைக்கழிப்பதை நான் யாரிடம் சொல்லி தீர்வு காண்பேன். இப்படி நான் நைந்துருகி நிற்கும் வேளையில் ப்ராணன் தரிக்க எனக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லையே என்று பராங்குச நாயகி பாவத்தில் அரற்றுகிறார் ஆழ்வார்.

**இரண்டாம் வ்ருத்தாந்தம்**

*வேய் மரு தோளிணை மெலியும் ஆலோ*
*மெலிவும் என் தனிமையும் யாதும் நோக்காக்*
*காமரு குயில்களும் கூவும் ஆலோ*
*கண மயில் அவை கலந்து ஆலும் ஆலோ*
*ஆ மருவு இன நிரை மேய்க்க நீ போக்கு*
*ஒரு பகல் ஆயிரம் ஊழி ஆலோ*
*தாமரைக் கண்கள் கொண்டு ஈர்தி ஆலோ*
*தகவிலை தகவிலையே நீ கண்ணா [10-3-1]*

காலைப்பூசல் என்றறியப்படும் இந்தப் பாசுரம், ஸ்ரீக்ருஷ்ணன் பசுக்களை மேய்ச்சலுக்குக் கூட்டிச் செல்லும் காலை வேளைகளில் கோபிகைகள் படும் பாட்டினை விவரித்தது.

இரவு முழுவதும் ஸ்ரீக்ருஷ்ணனின் தோள்களில் சாய்ந்து உறங்கிய கோபிகை, இப்படி நம்மை அணைத்து உறங்கும் இவன் சூரியன் உதித்து விட்டால் பிரிந்து செல்வானே என்று கவலைக் கொள்கிறாள். இளங்காலையில் இந்தக் குயில்கள் பஞ்சம ராகத்தில் மிக ரம்யமாகக் கூவி என் வேதனையினை இன்னும் அதிகரிக்கின்றனவே. ஜோடி ஜோடியாக மயில்கள் அழகாகத் தோகை விரித்தாடி பாடாய்ப் படுத்து கின்றன. ஒரு பகல் தானே. வேகமாக ஓடி விடும் என்று எண்ணி ஆச்வாஸம் கொள்ள முடியவில்லையே. இந்த அழகன் இன்னும் சில மணித்துளிகள் மட்டுமே நம்முடன் இருப்பான் என்ற எண்ணமே பெரும் அவஸ்த்தையினை உண்டாக்குகிறதே. பசுக்களை மேய்க்கச் செல்லாமல் இவனை இங்கேயே தடுத்து நம் பக்கலில் வைத்துக் கொள்வதும் இயலாத கார்யமாயிற்றே என்று பராங்குச நாயகி பாவத்தில் பலவாறு புலம்புகிறார் ஆழ்வார்.

ஆய கலைகள் அத்தனையையும் ஒருவர் கற்றுக் கொடுக்க மற்றவர் கற்றுக் கொள்ளலாம். ஆனால் பக்தி எப்படி செய்ய வேண்டும் என்று கற்றுக் கொடுப்பது பஹுப்ரயத்தனம் ஆகிறது. கர்மபத்தர்களாகிய ஆச்ரிதர்கள் அனைவரும் உய்வதற்கென பக்தி எப்படி செய்வது என்பதை போதிக்கும் நம்மாழ்வாரின் கருணைக்கு ஈடுயிணையே கிடையாது. ஆழ்வார் உத்தரவினை சிரமேற்கொன்டு அவர் காட்டிய வழியில் எம்பெருமான் திருவடி பணிந்து ரக்ஷணம் ப்ரார்த்திப்போம்.



Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (30)

## Hail To A Great Acharya – One Of His Kind

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

As we prepare to celebrate Swami Desika's Vaarshika Mahothsavam (758th Thirunak shathram) the mind gets boggled marvelling at his greatness and overwhelmed by the mercy he has shown to us.

Knowledge (Jnanam), adherence to orthodoxy (Anushtaanam), austerity (Vairagyam) and nobility (Athma Gunam) are considered as the most important traits of a model Sri Vaishnava preceptor. That Swami Desika was an epitome of all these and beyond has been well documented in his illustrious life account.

To comprehend his greatness in full is a Herculean task, at least for me, given the acutely limited knowledge at my disposal. And trying to compress all of it in a Note of this nature is even more daunting. But, that wouldn't deter me from making an attempt, for I have been longing for it for long.

Learned men aver that it is impossible not to get awe-struck by the remarkable appeal his works make for, his mastery over the nuances of the language (whether Sanskrit or Tamil) and the sheer volume and range of his works. It is not often that quality and quantity go together but in our Acharya's case it would seem that they had compromised and forged an awesome combination.

An academician of North Indian origin observed with profundity: "Vedantha Desika ennobles his poetry by philosophy and embellishes his philosophy by poetry'. That he was a follower of a different faith puts the accolade in proper perspective. Such is the wield of the great master's spell, it can floor anyone.

The amazing array of his works numbering well over a hundred – ranging through hymns (28), poetics (4), drama (1), philosophics (14), commentaries (8), procedurals (2) esoterics (32) and Tamil Prabandhams (24) – bears testimony to his unparalleled prolificacy. It is something, perhaps, no one has ever done from across philosophies.

But for divinity this would not have been possible. Composing of Padhuka Sahasram (1008 slokas) and its circumstances are a case in point. To have scripted such a class act in three hours is unbelievable otherwise. Consider some of the pointers in his life:



- Intervention of Lord Venkatesa's grace even prior to his birth;
- To have been born on Purattasi-Sravanam – exactly the Avathara day of the Lord;
- The matchless mastery he attained in all aspects of learning at a very young age;
- To have directly received initiation of Manthras from Garuda;
- To have been conferred the titles by Periya Perumal (Vedanthacharya) and Periya Piraatti (Sarvathanthra Swathanthra);
- His adopting a unique style for Daya Sathakam – that of addressing the Compassion of the Lord and not the Lord Himself (because no one calls out himself) whereas he has used the conventional vocative for other Deities in other hymns.

They all corroborate to show that it is a reality, not a mere belief, that Sri Desika is an incarnation of Lord Venkatesa Himself. To top it all, there is a

compelling and clinching evidence that brings to the fore Kaliyan's clairvoyance.

பொன்னை மாமணியை அணியார்ந்ததோர்
மின்னை வேங்கடத்து உச்சியில் கண்டு போய்
என்னை ஆளுடை ஈசனை எம்பிரான்
தன்னை யாம் சென்று காண்டும் தண்காவிலே.

(Periya Thirumozhi 10-1-2)

"My gold, gem, stunning lightning, my lord and my master – we had worshipped Him at the peak of Thiruvenkatam. We shall go and have His Darsan in Thiru-Thanka too (Thooppul)".

It may be seen that the Azhwar directly descends to Thiru-Thanka from Thiruvenkatam, strongly suggesting or even foretelling the Avathara of Swami Desika. For three reasons, putting the fact (Thiruvenkatam followed by Thiru-Thanka) down to mere coincidence would defy logic.

Firstly, Kaliyan has performed Mangalaasanam to 86 Divyadesams and the follow-up to Thiruvenkatam could have been any of the other 84 instead of Thiru-Thanka. Secondly, Thiru-Thanka has been sung only by Kaliyan and that too in only two paasurams, rendering the probability of a 'chance co-occurrence' of the two Divyadesams far too negligible. Finally and very interestingly, future tense (காண்டும் - shall go and see) has been used for Thiru-Thanka, signalling the birth of Sri Desika.

Thiruvenkatamudaiyan promptly fulfilled Kaliyan's wishes by His incarnation as Venkatanatha in Thooppul in the year 1268. Is not our Acharya hailed as "கலியன் உரை குடி கொண்ட கருத்துடையோன்'?

Pillai Lokacharya paid one of the most telling tributes to Swami Desika with his Thaniyan, saying that if people got to know even a single work of the great master, that would be enough to grant prosperity in their lives:

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

If our Sampradaya were to be likened to a gem-studded pendant, Sri Ramajuna is Nayaka Mani – the central or anchoring piece and Swami Desika is a shiny and precious stone of breathtaking hues. The legacy of our tradition is a lofty one and we should strive to follow in the footsteps of our great Acharyas and fulfil our obligations earnestly.

Meanwhile, let us all celebrate the Acharya's Uthsavam not only with devotion and dedication, but also with pomp and fanfare. However hard we try, it would still be inadequate as it is impossible to pay back for the compassion he has poured on us by removing our ignorance and showing us the Saranaagathi way through his great works.

To quote from his own verse:

. . . போற்றியுகப்பதும் புந்தியில்கொள்வதும் பொங்குபுகழ்
சாற்றிவளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம்பெற்றதற்கே.

(Adhikara Sangraham - 38)

*(to be continued…)*


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
**9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,**
**மயிலாப்பூர், சென்னை – 600004.**
**போன்: 044 – 4322 9401.**

**நிர்வாகம்:**
**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners (30)

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter – 29**

**Charama Sloka Adhikaram**

Swami Desikan explains in detail and clarifies all doubts in the Charama Slokam of Bhagavan Krishna which is the third Rahasya.

Swami first describes the circumstances under which this Charama Sloka was uttered by Bhagavan Krishna -- to console Arjuna who was petrified of consequences from killing relatives and gurus. Bhagavan advised him about the Aathma Svarupam, how it is different from Sariram and about Karma Yoga, Jnaana Yoga and Bhakti Yoga to attain the ultimate goal. When Arjuna despaired of performing the arduous Bhakti Yoga, Sri Krishna uttered this Charama Sloka in which He advocates Prapatthi as it had already been established as an alternative to Bhakti in the Sloka 'Bhaktya paramaya vaapi prapatya va mahamathe'. The first part of the Charama Sloka mandates Upaayam and the second part describes the phalanx, thus being the motivation for Upaayam.

"Sarva Dharman" denotes, all Upasanams with all their Angams as necessitated by Sasthras.

"Parityajya" means to sacrifice the desire, because of inability, in performing such Upaasanams. This goes to qualify the Adhikari. When "parityajya" is taken to be a rule (vidhi), it denotes the kaarpanyam or incapability and thus qualifies Prapatthi as stand-alone which does not need anything else to fructify. It does not apply to Svarupa Tyagam of Nithya, Naimithika karmas and Varna-asrama dharmas. It only means except for the essential five angams



during Prapatthi, it does not require any specific dharma as angam for Prapatthi. A Prapanna should continue to do his Nithya, Naimithika karmas as per Sasthras for Bhagavan's pleasure. As already mentioned, the sabdas denoting devathaantaram in the mandated karmas reach up to Paramathma and thus do not impact paramaikanthitvam. He should do kainkaryams only after completing the mandated Nithya karmas like Sandhyavandhanam as per his sutras, etc. If 'parityajya' is taken as a rule, it serves to caution the Mumukshu not to embark upon impossible means, desist from arduous tasks and sacrifice other means except Prapatthi.

"Maam", "Ekam" and "Aham" denote the Independent Master who is very accessible and who is the means. He is always inclined towards us, anticipating our request and eagerly awaits it. "Maam" denotes Him with all His attributes, Divya Mangala vigraham and Piratti. "Ekam" means He is both Upaayam and phalan and is the stand-alone cause and hence Prapanna is not the main Kartha (doer) of Upaayam but only Bhagavan is the Sidhdhopaayam and Prapatthi is nothing but a means of attracting Him.

There are many arguments against Prapatthi raised by some, based on "Ekam", to say that since He is Sidhdhopaayam, Prapatthi is unwarranted. Swami annihilates these arguments one by one emphatically. He establishes that 'Eka' sabdam denotes that no other means is needed other than Prapatthi and no karmas are required, per se, as angams for Prapatthi and quotes various instances from puranas of various Saranagathis to prove this. Prapatthi can give any benefit and it stands in place of other Upaayams based on differentiation between Adhikaaris.

"Saranam" denotes Saranagathi and though it was addressed to Arjuna, it applies to everyone who doesn't have any other refuge than Bhagavan.

"Vraja" is similar to "Prapadye" in Dvayam. It denotes the function of Prapatthi.

It needs to be done only once and it mitigates all sins including Praarabda except the accepted Praarabda left till requested time of ascension. Swami refutes the arguments questioning Jeeva's kartrutvam and determines that it is not contradictory to expect a prayer from a Jeeva as he is Paraadheena Kartha and he has to experience the consequences of his actions as per Sasthras.

Thus, in the first part, Bhagavan mandated the doables from a Mumukshu and in the second part, He elucidates on what He does in acceptance of Prapatthi.

"Aham" denotes His incomparable ability to make impossible things possible and thus He can deplete innumerable sins for the excuse of a small deed due to His favour.

"Thva" denotes the Mumukshu who has learnt the three thathvas, has clarity about the ephemeral and ultimate benefit, is incapable of performing Bhakti Yoga, and is praying to Bhagavan to remove the impediments for phalan.

"Sarva papa" sabdam denotes the impediments causing adverse effects and reversal of benefits. Here Swami clarifies that Punyas are also in the same grade as Paapas as they also prevent Moksham and cause temporary benefits like swarga, etc. He expands on this Paapa sabdam from Saranagati Gadhyam. He reiterates that Buddhi Poorvaka Paapam will not be mitigated without Praayaschitham or punishment and goes on to refute the argument that such Paapas are enjoyed by Perumal as He is merciful. Some Prapannas may seemingly be let off without any punishment even for deliberate misdeeds but actually they would be experiencing adverse effects definitely, unknown to others, says Swami. So, a Prapanna should be very careful in not accruing Buddhi Poorvaka Paapam and Bhaagavatha Apacharam.

"Mokshayishyami" means Bhagavan says that "I will make you a Muktha when you desire". Here, mitigation of sins denotes that Bhagavan has let go of His nigraham. All Paapas except accepted Praarabda are destroyed and, after Prapatthi, careless and involuntary sins do not touch him. Deliberate sins are depleted through Praayaschitham and left-overs through punishment. Regarding Punyas, those not against ultimate benefit are experienced here and the left-overs are distributed to well-wishers. All the Paapas which were destroyed or those that did not latch on to the Papanna are distributed among his haters during the last stage, says Swami.

Now a question arises as to how they will get his Paapas and experience adverse effects for something which they did not do and someone else did. Swami answers by saying that they hated this Bhaagavatha which is a Buddhi Poorvaka Paapam for which they are getting his Paapas as karma phalan. When all Paapas and Punyas are thus nullified, there is no further cause for delay in getting his desire.

Kaivalyam is not Moksham and it is in between Aiswaryam and Bhagavath anubhavam which is Saayujyam in Vaikuntam and the kaivalyarthi remains in prakruthi mandalam.

By "Maa sucha:" Bhagavan means, "You need not do arduous Bhakti Yoga for your desired benefit which you will get without delay by this Upaayam and hence you have no cause for sorrow anymore". The Prapanna gets divested of responsibility regarding his Athma and relieved of his fear regarding his previous misdeeds affecting the ultimate benefit (Nirbharam and Nirbhayam). When a Prapanna's sorrow knows no bounds, he does Aartha Prapatthi as he cannot bear even a second more of this Samsaara. Druptha Prapanna is one who is also sorrowful but has consoled himself with Bhagavath, Bhaagavatha kainkaryam here, and it does not mean that he has pride, arrogance or self-indulgence in material things. Swami goes on to list ten meanings for this sabdam relating to ten types of sorrow which are relieved due to Prapatthi.

Thus, Charama Sloka mandates a Prapanna to not embark upon the Bhakti Yoga for which he is incapable, but surrender unto Bhagavan, as Bhagavan promises to mitigate all his sins and hence he need not be sorrowful..

***(to be continued…)***


**ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு**

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.
விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:




*With Pranams:*

**R. Srinivasan**

Block No. 6, 2B, Rani Meyyammai Towers,

MRC Nagar, Chennai - 600 028.

**SVDD thanks Sri R. Srinivasan**

for sponsoring this month's issue of Desika Sandesam



கடை ச்ரவணம்









கடை ச்ரவணம்

